

கலைஞர் தொலைக்காட்சி செய்திப் பிரிவுத் தலைவர் – எழுத்தாளர் திருமாவேலன் இல்ல மணவிழா வரவேற்பு நிகழ்வில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் உறவினர்கள் உள்ளனர்.



திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மத்திய, கிழக்கு, வடக்கு, தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே என் நேரு அவர்கள் உரையாற்றினார், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சாமிநாதன், வேலுச்சாமி, வைரமணி, தியாகராஜன், கதிரவன், மேயர் அன்பழகன், துணை மேயர் திவ்யா தனுஷ்கோடி, அன்பில் பெரியசாமி, சௌந்தர பாண்டியன், கே.என்.சேகரன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி அவைத்தலைவர்கள் அம்பிகாவதி, தர்மலிங்கம், கோவிந்தராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் முத்துச்செல்வம், வண்ணை அரங்கநாதன் மதிவாணன் ,குடமுருட்டி சேகர், ஆனந்த், தர்மன் ராஜேந்திரன், சித்ரா பாரிவள்ளல் கருணை ராஜா , சபியுல்லா, காஜாமலை விஜய், கண்ணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

### வயது மூத்தவர்களுக்கு கட்சியில் இனி பதவி கிடைக்காது என யாரும் வருத்தப்பட வேண்டாம்!

# அனைவருக்கும் பொறுப்பு வழங்கப்படும் என தலைவர் தெரிவித்துள்ளார்!

## ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, செப். 8-

திருச்சி தி.மு.க. மத்திய, கிழக்கு, வடக்கு, தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கழக முதன்மை செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட செயலாளருமான் அன்பில் மகேஷ், மற்றும் மாவட்ட செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தி.மு.க. மறு சீரமைப்பு பணி தொடர்பாக நடந்த செயற்குழு கூட்டத்தில் திமுக தலைமையிலிருந்து மாவட்ட பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு ள்ள எம் எல் ஏ, வேடச்சந்தூர் சாமிநாதன், முன்னாள் எம் எல் ஏ வேலுச்சாமி முன்னிலையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான கே.என். நேரு, பேசும்போது:-

"திமுக தலைவராக மு க ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்பு நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் திருச்சி திமுக நூறு சதவீதம் வெற்றியை பெற்றது 2026 சட்டமன்ற தேர்தலில் தான் நாம் ஏழு தொகுதிகளை இழந்துள்ளோம் மீண்டும் அந்த தொகுதிகளை நாம் வெற்றி பெற வேண்டும் அதற்காகத் தான் இந்த கூட்டம்.

இனி வரும் காலங்களில் நாம் ஒன்றாக இணைந்து செயல்பட்டு வெற்றி பெற வேண்டும்

மாநகரத்திற்கு இனி செயலாளர் கிடையாது. பகுதி செயலாளர்கள் மட்டுமே பல மறுசீரமைப்பை தலைமை அறிவித்துள்ளது. அதன்படி செயல்பட வேண்டும் வயது மூத்தவர்களுக்கு இனி பதவி கிடைக்காது என யாரும் வருத்தப்பட வேண்டாம் அனைவருக்கும் பொறுப்புகள் வழங்கப்படும் என தலைவர் தெரிவித்துள்ளார். நீங்கள் இருந்தால் தான் திமுக வெற்றி பெற முடியும் நீங்கள் தான் திமுக.

அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயல்படுவோம் உங்களுக்காக நான் அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவேன் என தெரிவித்தார்

தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பேசும்போது:-

எனக்கு ஒன்று என்றால் நேருவும் அவருக்கு ஒன்று என்றால் நானும் கழகத்திற்கு ஒன்று என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்து நிற்போம்.

தி.மு.க. என்கிற ஆலமரத்தை யாராலும் அசைத்து பார்க்க முடியாது.

நேருவின் தளபதியாக செயல்பட்டு இனி எந்த தேர்தல்கள் வந்தாலும் 100 சதவீதம் வெற்றி பெற செய்ய வேண்டும் என்பதற்காக தான் இந்த கூட்டம்.

என்னையும் நேருவையும் பொன்னர் சங்கர் என ஸ்டாலின் கூறுவார்.

ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்கட்சியாக இருந்தாலும் தொண்டர்களுக்கு தி.மு.க. பாதுகாப்பு வளையமாக இருக்கும்.

அண்ணன் நேரு வீட்டில் நடந்த சோதனையின் போது நான் அங்கு இருந்தேன். அந்த ஏழு மணி நேரத்தில் நிறைய பாடத்தை கற்று கொண்டேன்.

திருச்சி கிழக்கு இடை தேர்தல் வரும் போது தேர்தலில் வெற்றி பெற முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தி.மு.க. காலத்துக்கு ஏற்றவாறு தன்னை தகவமைத்து கொண்டதால் தான் இன்னும் இயக்கம் நிலைத்து நிற்கிறது.

நமக்கு எதிராக இருப்பவர்கள் பொய்யர்களாகவே இருக்கிறார்கள் அவர்களை நாம் எதிர்கொள்ள வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ. கதிரவன், மேயர் அன்பழகன், துணை மேயர் திவ்யா தனுஷ் கோடி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் பெரியசாமி. சௌந்தர பாண்டியன். கே.என்.சேகரன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, அவைத்தலைவர்கள் அம்பிகாவதி, பேரூர் தர்மலிங்கம், பண்ணைப்பட்டி கோவிந்தராஜன், முத்துச்செல்வம், வண்ணை அரங்கநாதன், மதிவாணன், குடமுருட்டி சேகர், துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, விஜயா ஜெயராஜ், லீலா வேலு, மயில்வாகனன், ஆனந்த், தர்மன், ராஜேந்திரன், துரைராஜ், சித்ரா, பாரிவள்ளல், கருணை ராஜ், காஜாமலை, விஜய் கண்ணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி நமது திருச்சி மத்திய கிழக்கு மேற்கு தெற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து ஒன்றிய நகர பேரூர் மற்றும் மாநகர வட்டக் கழகங்களில் மறு சீரமைப்பு பணிகளை தலைமை கழகத்தின் வழி காட்டுதலின்படி விரைவாகவும் சிறப்பாகவும் செய்து சீரமைப்பு செய்யப்பட்ட பட்டியல்களை தலைமைக் கழகத்தில் விரைவில் ஒப்படைப்பது என தீர்மானிக்கப்பட்டது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### அன்றாடம் சீரழியும் சட்டம் – ஒழுங்கை சீர்படுத்தி ஜனநாயக ஆட்சியை நடத்த வேண்டும்!

# பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை என்பதை முதல்வர் உணர வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 8-

"பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை'' என்ற பழைய பாடத்தைப் புதிய அரசும், முதலமைச்சரும் உணர்வது நல்லது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைச் செயலாளரும், மேனாள் அமைச்சரும், இந்நாள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு.கே.என்.நேரு அவர்கள் மற்றும் அவரது சகோதரர்கள் இல்லங்கள், அலுவலகங்களில் தமிழ்நாடு அரசின் லஞ்ச ஒழிப்புத் துறை நேற்று (5.9.2026) சென்று, சோதனைக்கு மேல் சோதனை போட்டனர்.

இதற்குமுன் சட்டமன்றத் தி.மு.க.வின் கொறடாவும், மேனாள் அமைச்சருமானண எ.வ.வேலு அவர்கள் மீதும் குற்றச்சாட்டு கூறி, வழக்குத் தொடர்ந்ததில், நீதிமன்றத்தின் ஆணைப்படி அப்படியே அது நிற்கும் நிலை.

**தலைமைச் செயலாளர் மீது நடவடிக்கை உண்டா?**

பழிவாங்கும் அரசியல் தான் கடந்த 100 நாள் ஆட்சியில் அரங்கேற்றப்பட்டு வருகிறது. குற்றம் சுமத்தப்பட்ட ஆளுங்கட்சியாளர்கள் மீதோ, மற்றபடி முதலமைச்சர், அமைச்சருக்குத் ''தெரியாமல்'' கூட்டணிக் கட்சியாகிய, ஆதரவு தந்து வருகின்ற கட்சியினர் மீது அடக்குமுறைப் பாய, ஆயத்தமாகக் குறிப்பெடுப்பதற்கும், மாணவர்கள் பற்றிய விவரச் சேகரிப்பிற்கும் காரணமானத் தலைமைச் செயலாளர் மீது, அக்கட்சிகளின் பொறுப்பு மிகுந்த தமிழ் மாநில செயலாளர்கள் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளை அறிவித்தும், இது வரை எந்த சிறு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.



ஏன்? காவல்துறையின் பல நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட துறை ஆளுமைகளுக்கே தெரியாத வண்ணம் 'Administrative Excutive' ஆக அதிகார வர்க்கத்தின்மூலம் நடைபெறும் அவலம் (மேற்சொன்ன தொடர் உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகளின் தீர்ப்பு ஒன்றில் ஒரு நீதிபதி, மக்கள் ஓட்டுப் போட்டு ஆட்சியை நடத்துபவருக்கு 'Political Excutive' என்ற புது சொற்றொடர் தரப்பட்டது).

இதுவரை போடப்பட்ட வழக்குகளில், உயர் நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தின் விசாரணைகளில் ஆளும் அரசுக்குச் சாதகமாக இல்லாததே, பழிவாங்கும் அரசியல் நடைபெறுகிறது என்பதற்கான மறைமுகச் சுட்டிக்காட்டுதல் போன்ற நிலை அல்லவா? அது ஒருபுறம் இருக்கட்டும்!

**"எங்கள் மீது சுமத்தப்பட்டவை ஆதாரமற்றவை என்று நாங்கள் நிரூபிப்போம்!" - கே.என்.நேரு!**

விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து, நீதிமன்றங்களில், "எங்கள் மீது சுமத்தப்பட்டவை ஆதாரமற்றவை என்று நாங்கள் நிரூபிப்போம்'' என்று கூறியுள்ளதோடு, 'இந்த அச்சுறுத்தல் அரசியலை எதிர்கொள்ளத் தயார்' என்று கே.என்.நேரு கூறியுள்ளார்.

அதோடு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என். நேரு குடும்பம் பாரம்பரியமான வியாபாரத்திலும், விவசாயத்திலும் லால்குடி பகுதி, மற்ற பகுதிகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு, வசதி படைத்தக் குடும்பத்தினர். இதற்கு முன் ஒன்றிய அரசின் வருமான வரித் துறை வழக்குகளைச் சமாளித்து, தங்களது நிலைப்பாட்டை நிரூபித்து, நெருப்பாற்றில் நீந்திப் பழக்கப்பட்டவர்கள்.

இதனால், ''தமிழ்நாட்டின் ஆக்கப்பூர்வ அரசியல் நடைபெறாமல், பழிவாங்கும் எதிர்மறை அரசியல் தான் நடக்கிறது 'ஜனநாயகன்' ஆட்சியில்'' என்று ஓட்டுப் போட்ட மக்களே உணரும் நிலை இப்போது! (ஆதரவு தரும் கூட்டணிக் கட்சியினரின் அதிருப்தி, மலைபோல இருக்கும் நிலையில்).

மக்கள் நாயக ஆட்சியை நடத்த வேண்டும் என்பதே பொதுவானவர்களின் கருத்து!

எனவே, ஆக்கப்பூர்வ ஆட்சியை நடத்தி, அன்றாடம் சீர்கேடு அடையும் சட்டம் ஒழுங்கைச் சரிப்படுத்தி, மக்கள் நாயக ஆட்சியை நடத்தவேண்டும் என்பதே பொதுவானவர்களின் கருத்து என்பதை மறந்தால், அதன் விளைவை அறுவடை செய்யவேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சியையே சாரும்.

எந்த ஆட்சியானாலும், ''பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை'' என்ற பழைய பாடத்தைப் புதிய அரசும், முதலமைச்சரும் உணர்வது நல்லது!

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு 12,000 அடியாக அதிகரிப்பு!

சேலம்,செப்.8-

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காகத் திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 12,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் 1ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து வைக்கப்பட்ட நிலையில், விவசாயிகளின் தேவையை முன்னிட்டு இந்த நீர் திறப்பு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, இன்று (செப்டம்பர் 7, 2026) காலை 6 மணி முதல் 12,000 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

நீர்வரத்து நேற்று மாலை 9,709 கன அடியாக இருந்த நிலையில் வினாடிக்கு 9,512 கன அடியாக சற்று குறைந்துள்ளது. தற்போது டெல்டா மாவட்டங்களில் பாசன தேவை அதிகரித்துள்ளதாலும் கடைமடை வரை தண்ணீர் சென்று சேராத காரணத்தாலும் நீர் திறப்பை அதிகரிக்க விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். இதனை தொடர்ந்து இன்று மேட்டூர் அணையில் இருந்து திறக்கும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டு உள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு தொடர்ந்து அதிகரிக்கப்படுவதால் அணை மின் நிலையம் சுரங்க மின் நிலையம் மற்றும் ஏழு கதவணைகளில் மின் உற்பத்தி அளவு அதிகரித்துள்ளதாக நீர் மின் நிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

### தீபாவளிக்கு 2 நாட்களுக்கு முன் பயணிக்க

# ரயில் டிக்கெட் முன்பதிவு சில நிமிடங்களில் நிறைவு!

சென்னை,செப்.8-

தீபாவளிக்கு 2 நாட்கள் முன்னதாக பயணிக்க ரயில் டிக்கெட் முன்பதிவு சில நிமிடங்களில் முற்றிலுமாக விற்றுத் தீர்ந்தன. நவம்பர் 6 ஆம் தேதி சென்னையில் இருந்து சொந்த ஊருக்கு செல்லும் ரயில்களில் முன்பதிவு டிக்கெட்கள் 2 நிமிடங்களில் முற்றிலுமாக விற்றுத் தீர்த்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 8 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், அதற்கு 2 நாட்கள் முன்னதாக (நவம்பர் 6, வெள்ளிக்கிழமை) சொந்த ஊர்களுக்குப் பயணிக்க விரும்பியவர்களுக்கான ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே அனைத்து முக்கிய ரயில்களிலும் டிக்கெட்டுகள் முற்றிலுமாக விற்றுத் தீர்ந்தன.

மேலும், பல இடங்களில் IRCTC தளம் முடங்கியுள்ளதாகவும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான பயணிகள் IRCTC இணையதளம் மற்றும் செயலியைப் பயன்படுத்தியதால், சர்வர் தற்காலிகமாக முடங்கியது. இதனால் பலர் டிக்கெட் முன்பதிவு செய்ய முடியாமல் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

தீபாவளி முன்பதிவு ரயில் டிக்கெட் நேற்று தொடங்கியது. நேற்று தொடங்கிய சில நிமிடங்களில் முன்பதிவு டிக்கெட்டுகள் விற்று தீர்த்தன. இதனையடுத்து இன்று தொடங்கிய முன்பதிவு டிக்கெட்கள் 2 நிமிடங்களில் முற்றிலுமாக விற்றுத் தீர்த்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2வது நாளும் டிக்கெட்டுகள் விற்றுத்தீர்ந்த நிலையில் சிறப்பு ரயில் தொடர்பான அறிவிப்பை முன்கூட்டியே வெளியிட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நவம்பர் 7 தீபாவளிக்கு முந்தைய நாள்(சனிக்கிழமை) இதற்கான முன்பதிவு நாளை செப்டம்பர் 8 காலை 8:00 மணிக்குத் தொடங்கும். நவம்பர் 8 தீபாவளி பண்டிகை அன்று இதற்கான முன்பதிவு நாளை மறுநாள் செப்டம்பர் 9 காலை 8:00 மணிக்குத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோவை மாநகர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் தலைமையில், கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டதில் மறுசீரமைப்புக் குழு தலைமை கழக நிர்வாகிகள் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், கழக மகளிர் அணி துணை செயலாளர், சேலம் மாநகராட்சி முன்னாள் மேயர் ஜெ.ரேகாரேகா பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தலைமைக் கழகம் சார்பில் மறுசீரமைப்புக் குழு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தான திருப்பூர் மத்திய மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் எஸ்.டி.இசை கருத்துரை வழங்கினர். இதில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணை தலைவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.